**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 160 / 2021**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW1 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Narayanasamy |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 2nd day of June, 2026.

**( A1, A3, A4, A6 are absent, Petition filed and allowed. A2 died C/A. A5 Split up )**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 12.40 மணி

நான் தற்போது திருத்தணி அரசு போக்குவரத்து பணிமனையில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். 03-05-2013 அன்று தடம் எண் T7 என்ற அரசு பேருந்து பதிவெண் TN 21 N 0762 என்ற பேருந்தை திருத்தணியிலிருந்து சிவாடா நோக்கி

சென்று கொண்டிருந்தபோது காமாட்சியம்மன் கண்டிகை அருகில் மதியம் 3.40 மணிக்கு வண்டியின் பின்னால் டமால் என்று சத்தம் கேட்டது. பஸ்ஸின் பின்பக்க கண்ணாடி உடைந்திருந்தது. யார் கல் எறிந்தார்கள் என்று பார்க்கும்போது யாரும் இல்லை. இது குறித்து திருத்தணி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறுகிறார்.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 160 / 2021

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW2<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Srinivasan |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 2nd day of June, 2026.

**( A1, A3, A4, A6 are absent, Petition filed and allowed. A2 died C/A. A5 Split up )**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 12.46 மணி

நான் திருத்தணி அரசு போக்குவரத்து பணிமனையில் கிளை மேலாளராக பணிபுரிந்து நவம்பர் 2025 ல் ஓய்வு பெற்றேன். 03-05-2013 அன்று TN 21 N 0762 தடம் எண் T7 பேருந்து மதியம் 3.15 மணிக்கு திருத்தணியிலிருந்து சிவாடா

நோக்கி செல்லும்போது காமாட்சியம்மன் கண்டிகை அருகில் பின்னால் இருந்து பேருந்து கண்ணாடி மீது கல் எறிந்து கண்ணாடிகள் நொறுங்கியுள்ளது. அதற்கான சேதமதிப்பாக ரூபாய் 3,000/- என சேதமதிப்பிற்கான சான்று கொடுத்தேன். சேதமதிப்பு சான்று **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக ஆய்வாளரிடம் வாக்குமூலம் கொடுத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறுகிறார்.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 160 / 2021**

| Deposition of Witness for | Prosecution PW3<br>Defence<br>Court |
|---|---|

| | |
|---|---|
| Name | : Thiru. Sujan |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 2nd day of June, 2026.

**( A1, A3, A4, A6 are absent, Petition filed and allowed. A2 died C/A. A5 Split up )**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 12.50 மணி

நான் தற்போது ஆவடி இருப்புபாதை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது திருத்தணி காவல் நிலையத்தில் 2 ஆம் நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். 05-05-2013 அன்று

காமாட்சியம்மன் கண்டிகையில் திருத்தணி காவல் நிலைய குற்ற எண் 266/2013 பஸ் கண்ணாடி உடைந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் பார்வை மகஜர் தயார் செய்தார். சம்பவயிடத்திலிருந்து கல் மற்றும் உடைந்த கண்ணாடி துண்டுகள் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் கல் மற்றும் உடைந்த கண்ணாடி துண்டுகள் என் முன்னிலையில் கைப்பற்றினார். தற்போது அவைகள் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படுகிறது. பார்வை மகஜரில் உள்ள இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3 கற்கள் **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. உடைந்த பஸ் கண்ணாடி துண்டுகள் **அ.சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 09-05-2013 அன்று திருத்தணி அரசு மருத்துவமனை அருகில் மணிகண்டன் த/பெ. ரோஸ்குப்பா ரெட்டி என்பவரை ஆய்வாளர் கைது செய்தார். அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள உள்ள இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். மணிகண்டனை பார்க்கும் பட்சத்தில் அடையாளம் காட்டுவேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1, 3, 4, 6 ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்கள் எதையும் எதிரி முன்னிலையில் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நாங்கள் சம்பவயிடத்திற்கு சென்று பொருட்களை கைப்பற்றியதாக கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆய்வாளர் தயார் செய்து வைத்திருந்த கைப்பற்றுதல் மகஜரில் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.